# பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள்

அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப்பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.
(எபேசியர் 4:30)

பரிசுத்த ஆவியானவர் ஒரு வரமாய், முத்திரையாய், அச்சாரமாய் பாவத்தை விட்டு மனந்திரும்புகிற யாவருக்கும் கொடுக்கப்படுவதின் நோக்கம்...

இந்த உலகில் நம்மை பரிசுத்தமாகவும், தேவனாகிய கர்த்தர் நம்மில் எதிர்பார்க்கும் நீதியை உடையவர்களாகவும் நம்மை வாழ வைப்பதற்காகவே.

(அப்போஸ்தலர் 2:38, எபேசியர் 1:13-14, ரோமர் 8:1-4)

வேதத்தில் 2 தெசலோனிக்கேயர் 2:13 என்ற பகுதி சொல்கிறது... "நாம் பரிசுத்த ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறோம்" என்று.

வேதத்தில் எபேசியர் 4:22-24 என்ற பகுதி சொல்கிறது, "அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்" என்று.

பரிசுத்த ஆவியானவர், நாம் பாவத்திற்கு அடிமைகளாயிருந்து நாம் வாழ்ந்த பழைய பாவ வாழ்க்கையை விட்டு விடவும், அதன் பின்பு நாம் தேவனுடைய நீதிக்கே அடிமைகளாயிருக்கவும் நம்மில் வல்லமையை தருகிறார்.

ரோமர் 6:19-ன் படி "அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள்".

ஏனென்றால், "பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே". (எபிரெயர் 12:14)

# நம் பாவ வழிகளை விட்டொழித்தவர்களாய், தேவனுக்கு பிரியமான வாழ்க்கையை நாம் எப்படி வாழ முடியும்?

வேதம் திட்டமும் தெளிவுமாக சொல்கிறது, நம் முயற்சியால் மட்டுமே பரிசுத்தமாகவும், தேவனுக்கேற்ற நீதியை உடையவர்களாகவும் நம்மால் வாழ முடியாது. ஆனால், பரிசுத்த ஆவியானவர் மூலமாக மட்டுமே நம்மால் முடியும். (ரோமர் 8:1-17)

# அப்படியானால், நம் முயற்சி என்ன?

நாம் பாவம் செய்ய முயற்சிக்கும் போது, தூண்டப்படும் போது பரிசுத்த ஆவியானவர் இருதயத்தில் அதை பாவம் என்றும், அதை நாம் செய்யக் கூடாதென்றும் உணர்த்துவார்.

அப்பொழுதே அதை தேவனிடத்தில் அறிக்கையிட்டு விட்டு விடுவதே நாம் செய்ய வேண்டியதாகும். இப்படி நாம் செய்யும் போது, கர்த்தர் அதை நமக்கு மன்னித்து, நம் எல்லா அநீதியும் நீங்க நம்மை சுத்திகரிப்பார்.

(யோவான் 16:8, 1 யோவான் 1:9)

ஒரு வேளை, பரிசுத்த ஆவியானவர் பாவத்தை குறித்து உணர்த்தும் போது நாம் இருதயத்தை கடினமாக்கி கீழ்படியாமல் பாவத்தை செய்து, பாவ வழியில் தொடர்ந்து நடந்தால்...

**நம்மை பாவம் செய்ய விடாமல் காத்து கொள்ள, நம்மை பரிசுத்தமான வாழ்க்கை வாழ வைக்க நமக்குள் வாசமாயிருந்து நமக்கு பேருதவி செய்யும் பரிசுத்த ஆவியானவரை நாம் துக்கப்படுத்துகிறோம்.**

1 தெசலோனிக்கேயர் 4:1–8 வேத வசனங்கள் சொல்கிறது: “நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது” மற்றும் “தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார்” என்று.

மேற்கண்ட வேத பகுதி இவ்வாறு சொல்கிறது: “ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்தஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்.”

நாம் கண்ட வேத பகுதிகளில் சொல்லப்பட்ட படியே "பரிசுத்த ஆவியானவருக்கு கீழ்ப்படியாமல் போவது தேவனையே அசட்டை பண்ணுகிற காரியமாயிருக்கிறது."

**"தேவனையே அசட்டை பண்ணுகிறபோது, நிராகரிக்கும் போது" அதின் முடிவு என்ன?**

எபேசியர் 4:30–5:6 என்ற வேத பகுதி இதன் முடிவை "தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்" என்று சொல்ல ஆரம்பித்து...

பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்த, நமக்கெதிராக உலகத்தில் சகலவிதமான கசப்பு, கோபம், மூர்க்கம், கூக்குரல், தூஷணம், வம்பு, புத்தியீனமான பேச்சு, பரியாசம் மற்றும் வேறெந்த துர்க்குணமும் என எவ்வளவு தீமைகள் உள்ளன என பட்டியலிடுகிறது.

எபேசியர் 5:3–7 என்ற பகுதியில், “மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் **பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது**” என்று கூறுகிறது.

**விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே.**

**(எபேசியர் 5:5)**

எபேசியர் 5:6 என்ற பகுதி,
“இப்படிப்பட்டவைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவதால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம்போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்” என்று கூறுகிறது.

தேவ கோபாக்கினை, தேவ தண்டனை என்பதெல்லாம் வருவதில்லை என்று ஒருவரும் உங்களை பொய்யான, வீண் வார்த்தைகளினாலே உங்களை வஞ்சித்து விடாதபடி, ஏமாற்றி விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள் என்று வேதம் மிக உறுதியாக எச்சரிக்கிறது.

தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்திக் கொண்டேயிருந்தால் தேவ கோபாக்கினை அல்லது தேவ தண்டனை உண்டு என்பது மிக உறுதியான எச்சரிக்கை.

எனவே,பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்ட தேவனாகிய கர்த்தருடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுகிற வாழ்க்கையை கடைசி வரை வாழும் போது தான் தேவனுடைய ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும்.

பரிசுத்த ஆவியானவரின் உணர்த்துதலை தொடர்ந்து அசட்டை செய்து நிராகரித்து கொண்டேயிருந்தால்,தேவனும் நம்மை நிராகரிப்பார். ஏனென்றால் “நாம் அவரை மறுதலித்தால், அவரும் நம்மை மறுதலிப்பார்”(2 தீமோத்தேயு 2:12)

சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல்நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்.மோசேயினுடைய பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே;தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றும், கர்த்தர் தம்முடைய ஜனங்களை நியாயந்தீர்ப்பார் என்றும் சொன்னவர் இன்னாரென்று அறிவோம்.ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே.(எபிரெயர் 10:26-31)

முடிவாக,வேதத்தில் 2 தெசலோனிக்கேயர் 2:13 என்ற பகுதி சொல்கிறது... "நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டார்" என்று.

தேவனாகிய கர்த்தர் நமக்களித்த இரட்சிப்பை காத்துகொண்டு கடைசி வரை நிலைத்திருந்து, தேவ ராஜ்யம் அடைய...

... நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்.ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல் எவனை விழுங்கலாமோ என்று வகைதேடிச் சுற்றித்திரிகிறான்.விசுவாசத்தில் உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள்; உலகத்திலுள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறிவருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.கிறிஸ்து இயேசுவுக்குள் நம்மைத் தமது நித்திய மகிமைக்கு அழைத்தவராயிருக்கிற சகல கிருபையும் பொருந்திய தேவன்தாமே கொஞ்சக்காலம் பாடநுபவிக்கிற உங்களைச் சீர்ப்படுத்தி, ஸ்திரப்படுத்தி, பலப்படுத்தி, நிலைநிறுத்துவாராக;அவருக்கு மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென்.

(1 பேதுரு 5:5-11)

பரிசுத்த ஆவியானவர் தாமே உங்களை அனுதினமும் காத்து, நடத்தி தேவ ராஜ்யத்தில் சேர்ப்பாராக.

தேவனாகிய கர்த்தருக்கே எந்நாளும் தோத்திரமும், துதியும், மகிமையும், கனமும் உண்டாவதாக. ஆமென்.